பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**28 09 2026 MONDAY 6.30 PM**

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** வேளாண் பணிகளுக்கு தேவையான உரங்கள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

**2)** நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களில் ஏற்றுமதி **15** சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.

**3)** முதலமைச்சர் திரு விஜய், மதுரையில் பத்து கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட காந்தி நினைவு அருங்காட்சியகத்தை இன்று திறந்துவைத்தார்.

**4)** தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின்கீழ், முதல்கட்டமாக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தங்க மோதிரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

**5)** ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா மூன்று வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள்---

<<<<<<<>>>>>

வேளாண் பணிகளுக்கு தேவையான உரங்கள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சவாலான சூழலில் உரங்கள் போதிய அளவில் கையிருப்பில் இருப்பதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகளே காரணம் என்று தெரிவித்தார்.

மண்வளத்தை பாதுகாக்க உரிய வகையில் உரங்களை பயன்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கென இயக்கம் ஒன்று மேற்கொள்ளப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

மண்வள அட்டையில் தெரிவித்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் உரங்கள் பயன்படுத்தப்படுவதை இந்த இயக்கம் உறுதி செய்யும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<<<>>>>>

நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களில் மட்டும் ஏற்றுமதி 15 சதவீத வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

மும்பையில் இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையே முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பான உயர்நிலை பணிக்குழுக் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம், இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

விண்வெளி தொழில்நுட்பம், கப்பல் கட்டுமானம், வேளாண் துறையில் புதுமை கண்டுபிடிப்புகள், எரிசக்தி பாதுகாப்பு, நிதி தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளை பரஸ்பரம் கண்டறிவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்கள் 90 நாட்களுக்குள் முடிவடைந்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

மின்உற்பத்திக்கு தேவையான நிலக்கரி போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

இன்று கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின்தேவை 12 முதல் 15 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக கூறினார்.

இருப்பினும், மின்உற்பத்திக்கு தேவையான நிலக்கரி விநியோகம் சீராக நடைபெற்று வருவதாகவும் திரு கிஷன் ரெட்டி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

முதலமைச்சர் திரு விஜய், மதுரையில் பத்து கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட காந்தி நினைவு அருங்காட்சியகத்தை இன்று திறந்துவைத்தார்.

பழமை மாறாமல் நவீன முறையில் இந்த அருங்காட்சியகம் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின்கீழ், முதல்கட்டமாக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தங்க மோதிரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு அருண்ராஜ் கூறியுள்ளார்.

இன்று மதுரையில் இந்த திட்டத்தின் தொடக்க விழாவில் பங்கேற்று அவர் பேசினார்.

இந்த திட்டத்திற்காக, 4 லட்சம் மோதிரங்கள் கொள்முதல் செய்வதற்கு வகை செய்யும் அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசு மருத்துவமனைகளில் பிரசவங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கல் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு அருண்ராஜ் கூறினார்.

<<<<<<>>>>>

வன்முறையால் பாதிக்கப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த சேவை மையத்தில் பணியாற்றி வரும் ஊழியர்களுக்கு கடந்த மூன்று மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதற்கான நிதியை மத்திய அரசு வழங்கி வந்தபோதிலும், ஊதியம் வழங்கப்படாதது ஏன் என்றும் வினவியுள்ளார்.

<<<<<<<>>>>>

திருப்பத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் தவெக-வை சேர்ந்த திரு சீனிவாச சேதுபதியின் வெற்றியை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை சென்னை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இதுதொடர்பாக, திமுக வேட்பாளர் திரு பெரியகருப்பன் தாக்கல் செய்த மனுவினை விசாரணை செய்த நீதிபதி திரு இளந்திரையன் இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

இந்த தொகுதியில் தவெக வேட்பாளர் ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருந்தார்.

<<<<<<<>>>>>

போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள திரு வீரமணிக்கு எதிராக புகார் அளிக்க விரும்புவோருக்கென தொலைபேசி எண்ணை சிறப்பு புலனாய்வுக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, **9 3 4 5 3 1 9 6 7 6** என்ற வாட்ஸ் அப் எண்ணில் புகார்கள், தகவல்கள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்கலாம் என்று காவல்துறையின் செய்திக்குறிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தகவல் கொடுப்பவர்கள் குறித்த விவரங்கள் ரகசியமாக வைக்கப்படும் என்றும், பெறப்படும் புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

மத்திய அரசின் ஊட்டச்சத்து திட்டம் சேலம் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்தில் உள்ள அங்கன்வாடி மையங்களில் **60** ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பயனடைந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(*Voice Byte — விஜய்குமார் - 45 Sec.)***

இந்த திட்டத்தின்கீழ், குழந்தைகளுக்கு புரதச்சத்து நிறைந்த உணவுகள் வழங்கப்படுவதாக அங்கன்வாடி பணியாளர் திருமதி மோகனா தெரிவித்தார்.

*(Sound Byte —மோகனா - 45 Sec.)*

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட தண்டையார்பேட்டை மண்டலத்தில் ஒரு கோடியே 95 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய பகுதி மற்றும் வார்டு அலுவலகத்தினை மாநில நிதியமைச்சர் திரு மரியவில்சன் இன்று திறந்துவைத்தார்.

------------

திருவண்ணாமலையில் உள்ள பௌர்ணமி கோ ஆப் டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி சிறப்பு விற்பனையை ஆட்சியர் திருமதி வந்தனா கார்க் தொடங்கிவைத்தார்.

-------------

தென்காசி கோ ஆப் டெக்ஸ் விற்பனை நிலையத்தில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 30 சதவீத சிறப்பு தள்ளுபடி விற்பனைத் திட்டம் செயல்படுத்தப்படுவதாக ஆட்சியர் திரு ரஞ்சித் சிங் கூறியுள்ளார்.

-------------

கன்னியாகுமரி மாவட்டம் கேசவன்புத்தன்துரை கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி கடல் அலையில் சிக்கி உயிரிழந்தார்.

-------------

பெரம்பலூர் மாவட்டத்தில் சைகை மொழி விழிப்புணர்வு குறித்த பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

---------------

விழுப்புரத்தில் ராபிஸ் நோய் குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

<<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா மூன்று வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கம் வென்றது.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டிகளின் ஆடவர் ஆயிரத்து **500** மீட்டர் ஓட்டத்தில் குல்வீர் சிங்கும், ஆடவர் நீளம் தாண்டுதலில் முரளி ஸ்ரீசங்கரும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

மகளிர் **400** மீட்டர் தடை ஓட்டத்தில் வித்யா ராம்ராஜும், மகளிர் ஐந்தாயிரம் மீட்டர் ஓட்டத்தில் **Parul Choudhary**-ம் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

ஆடவர் ஈட்டி எறிதலில் **Yashvir Singh** வெள்ளிப்பதக்கத்தையும், ரோஹித் யாதவ் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

ஸ்குவாஷ் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

குத்துச்சண்டை போட்டியின் மகளிர் பிரிவில் **Priya Ghanghas** மற்றும் **Lovlina Borgohain**-ம், ஆடவர் பிரிவில் **Kapil Pokhariya**-வும் அரையிறுதிக்கு முன்னேறி பதக்கத்தை உறுதி செய்துள்ளனர்.

**400** மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்தியா இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் வாலிபால் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

மகளிர் **800** மீட்டர் ஓட்டத்தில் பூஜா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஹாக்கிப்போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா **10-0** என்ற கோல் கணக்கில் பங்களாதேஷை வென்றது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை **4** தங்கம், **20** வெள்ளி, **21** வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் **12-**ஆவது இடத்தில் உள்ளது.

--------------

உலக துப்பாக்கிச்சுடும் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Mairaj Ahmad Khan, Raiza Dhillon, Vivaan Kapoor** உள்ளிட்டோர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி கத்தாரின் தோஹாவில் நவம்பர் ஒன்றாம் தேதி தொடங்கி, **14-**ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

**<<<<<<<<END>>>>>>**